# பனிமலையோடு எரிமலையும் ஏறும் இளையர் கூட்டணி

மலையேற்ற வழிகாட்டிகள், சுமை தூக்கிகள் ஆகியோரின் உதவி ஏதுமின்றி ஆசியாவின் உயரமான எரிமலையின் உச்சம் வரை ஏறும் முயற்சியில் இறங்கியுள்ளனர் திரு ஆஷிக் அசோகன், திரு அஷோக் குமார் ஆகிய இரு 24 வயது இளையர்.

ஈரானில் இருக்கும் டமாவந்த் மலையில் ஏறும் சவாலான பணியை அடுத்த மாதம் மேற்கொள்ளவிருக்கும் இவர்கள், சிறுவர் புற்றுநோய் அறநிறுவனத்திற்கு நிதி திரட்டவே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

“தினமும் ‘மலைகளைக் கடப்பது’ போன்ற சிரமத்துடன் வாழ்வை எதிர்கொள்கின்றனர் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர். அவர்களது துன்பங்களை மனதிற்கொண்டே இந்த முயற்சியை மேற்கொள்கிறோம். இவர்களுடன் ஒப்பிடுகையில் மலையேறும்போது நாங்கள் அடையும் துன்பம் அவ்வளவு பெரிதல்ல,” என்று கூறினார் திரு ஆஷிக்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் தொடர்புகள், புதிய ஊடகத் துறையில் பயிலும் திரு ஆஷிக், சிங்கப்பூர் நிர்வாகப் பள்ளியின் வர்த்தகத் துறை மாணவரான திரு அஷோக் ஆகியோர் ‘ஹார்ட்2கிளைம்ப்’ என்னும் அமைப்பின் மூலம் இந்த முயற்சியை மேற்கொள்கின்றனர்.




உடற்குறையுடையோருக்கான நன்கொடை திரட்டும் நோக்கில் 2014ஆம் ஆண்டு நேப்பாளத்தில் இருக்கும் அன்னபூர்ணா மலை மீது ஏறி சாதனை புரிந்தனர் ஆஷிக் அசோகன், அஷோக் குமார் (வலது) இருவரும். **படம்: ‘ஹார்ட்2கிளைம்ப்’**

5,610 மீட்டர் உயரத்தில் டமாவந்த் மலை சிங்கப்பூரின் உயரமான கட்டடமான ‘ஒன் ராஃபிள்ஸ் பிளேசை’ போல 20 மடங்கு உயரமாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

டமாவந்த் மலையில் ஏறும் சவாலான பணியில் இறங்க உடல் உறுதியும் மன உறுதியும் அவசியம். மலையின் அடிவாரத்தில் 40 டிகிரி செல்சியஸ் வரையும் மலை உச்சியில் 0 டிகிரி செல்சியசுக்கும் கீழும் அப்பகுதியில் வெப்பநிலை நிலவும்.

பனிப்புயல் ஏற்படும் வாய்ப்பும் உண்டு. இவற்றைத் தவிர எதிர்பாராத சவால்களையும் அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

விஷம் மிகுந்த கட்டுவீரியன் போன்ற பாம்புகள் போன்ற வன விலங்குகளும் டமாவந்த் மலையில் இருப்பதாகக் குறிப்பிட்டார் திரு ஆஷிக்.

கடந்த ஆண்டு சுமத்ராவில் இருக்கும் கெரின்சி எரிமலையில் ஏறிய இவ்விருவருக்கும் விலங்குகளை எதிர்கொள்வது புதிதல்ல. டான் டோக் செங் மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர் குமரன் ராசப்பன், 31, இவர்களுக்கு ஆலோசனை வழங்கி வருகிறார்.

எவரெஸ்ட் சிகரத்தின் உச்சத்தை அடைந்த முதல் சிங்கப்பூர் இந்தியர் என்ற பெருமையுடைய திரு குமரன் ராசப்பன், “உதிரும் மண், பாறைகள் நிறைந்த எரிமலையில் வழிகாட்டிகள் இன்றி ஏறுவது சுலபமான காரியமல்ல,” என்றார்.

உடற்குறை உடையோருக்கு நன்கொடை திரட்ட இவர்கள் 2014ஆம் ஆண்டு நேப்பாளத்தின் அன்னபூர்ணா மலையில் ஏறிச் சாதனி புரிந்தனர். அம்முயற்சியில் $50,000 நன்கொடை திரட்டினர்.

இவர்களின் முயற்சியைப் பாராட்டி நன்கொடை வழங்க விருப்பமுடையோர் www.heart2climb.com எனும் இணையப் பக்கத்தையோ அல்லது Heart2Climb எனும் ‘ஃபேஸ்புக்’ பக்கத்தையோ நாடலாம்.

## பயணத்தில் உதவும் பொருட்கள்

மலையேறும் இருவரும் சுமார் 15 முதல் 20 கிலோ எடையிலான பொருட்களைச் சுமந்து செல்லவிருக்கின்றனர். அவை:

- பல்வேறு வெப்பநிலைகளிலுருந்து காத்துக்கொள்ள ஏதுவான ‘டிரை–கிளைமேட் ஜாக்கெட்’.
- தொடுதிரைக் கணினிகள், கைபேசிகளை இயக்க ஏதுவான ‘இ–டிப்’ கையுறைகள்.
- மணிக்கு 25 கிமீ. வேகத்தில் காற்றடித்தாலும் தாங்கக்கூடிய மலைக் கூடாரம்.
- பூஜ்ஜியத்துக்குக் கீழான வெப்ப நிலையிலும் உடல் வெப்பத்தைத் தக்கவைக்கும் பொருட்களாலான தூங்கும் பைகள்.
- நீர்புகா, பனிபுகா கால்சட்டைகள்.
- பனிப்பாறைகள் மீது நடக்கும்போது காலணியில் இணைத்துக்கொள்ளும் மலையேறு மிதியடிகள்.
- பாறைகள் உருளும்போது பாதுகாத்துக்கொள்வதற்கான தலைக்கவசங்கள்.
- பயணத்தை ஆவணப்படுத்த கேமராக்கள்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.